DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.17

Accused Present.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.இராஜசேகர் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of June, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் மு.நி.காவலராக பணியாற்றிவருகிறேன். கடந்த 26.05.2022ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது மேற்படி காவல் நிலைய குற்ற எண் 178/2022 என்ற வழக்கில் விஜயகரிசல்குளம், காளியம்மன் கோவில் தெருவைச்சேர்ந்த இறந்துபோன 4 மாத குழந்தை கோகுலரக்சன் என்பவரின் பிரேத பரிசோதனைக்காக சாத்தூர் காவல்துணைக்கண்காணிப்பாளர் அவர்களுடன் பிரேத பரிசோதனைக்கு உதவியாக நியமிக்கப்பட்டேன். பின்னர் நானும் சாத்தூர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களும் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக சென்றோம். அன்று மதியம் 12.00 மணி முதல் 14.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டார். பின்னர் பிரேத விசாரணைக்கான தபாலை பெற்றுக்கொண்டு மதியம் 3.55 மணியளவில் விருதுநகர் மருத்துவக்கல்லூரி பேராசிரியரிடம் ஒப்படைத்தேன். பின்னர் 4.00 மணிக்கு சவக்கிடங்கில் உள்ள பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பின்னர்

பிரேத பரிசோதனையின் போது விசாரணை அதிகாரியுடன் நானும் இருந்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து பகுப்பாய்விற்காக பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை பெற்றும், பின்னர் பிரேதத்தை பெற்று அவரது தாத்தா வெள்ளைச்சாமி என்பவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் 27.05.2022ம் தேதி உடல் உள்ளுறுப்புகளை இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். பின்னர் 22.06.2022ம் தேதி நான் பணியில் இருந்தபோது நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த இரண்டு செல்போன்களை ஆய்விற்காக விசாரணை அதிகாரியிடம் கடிதம் பெற்று 23.06.2022ம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.16

Accused Present.

| | | | |
|---|---|---|---|
| Name | : திவ்யா | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of June, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் மு.நி.காவலராக பணியாற்றிவருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 26.05.2022ம் தேதி நான் மேற்படி நிலைய அலுவலில் இருந்தபோது 25.05.2022ம் தேதி பதிவான நிலைய குற்ற எண் 178/2022 பிரிவு 174(3) of குவிமுச என்ற வழக்கில் இறந்துபோன காயத்ரி என்ற இறந்துபோன பெண்ணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை அலுவலுக்காக அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் காலை 9.30 மணிக்கு கடவுச்சீட்டு பெற்றுச்சென்று அறிக்கை செய்தேன். பின்னர் மதியம் 2.00 மணிக்கு அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுடன் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பின்னர் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மதியம் 2.00 மணி முதல் 3.30 மணி வரை காயத்ரி என்ற இறந்துபோன பெண்ணின் பிரேத விசாரணை செய்தார்கள். பின்னர் பிரேத விசாரணை முடித்து இறப்புக்கான

காரணம் குறித்தும், மற்றும் மருத்துவ ரீதியாக பிரேத பரிசோதனை செய்ய மருத்துவ பேராசியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினார்கள். அந்த வேண்டுகோள்கடிதத்தை பெற்று நான் மதியம் 3.55 மணிக்கு மருத்துவ பேராசிரியரிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். பின்னர் மாலை 4.00 மணிக்கு சவக்கிடங்கில் இருந்த காயத்ரி என்ற இறந்துபோன பெண் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை பெற்றும், உடல் உள்ளுறுப்புகளை பெற்றும் பிரேதத்தை அவரது அப்பாவிடம் ஒப்படைத்தேன். பின்னர் உடல் உள்ளுறுப்புகளை மருத்துவ பேராசிரியரிடம் பகுப்பாய்விற்காக வேண்டுகோள் கடிதத்தை பெற்று நிலையம் சென்று 27.05.2022 ம் தேதி இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று வழக்கின் சொத்துக்களை ஒப்படைத்து ஏற்பளிப்பு பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். பின்னர் 13.06.2022 ம் தேதி நான் நிலைய பணியில் இருந்தபோது எதிரி கொத்தாளமுத்து என்பவரிடம் இருந்து கைப்பற்றிய இரத்தக்கறை படிந்த வெள்ளை துண்டு ஒன்றை இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று ஒப்படைத்துவர கடவு சீட்டு பெற்று, 14.06.2022 ம் தேதி ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.15

Accused Present.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கல்யாணக்குமார் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of June, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உதவி ஆணையராக கலால் பிரிவில் பணியாற்றுகிறேன். இதற்கு முன்பு 2022–2023ம் வருடம் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றி வந்தேன். கடந்த 26.05.2022ம் தேதி நான் எனது அலுவலகத்தில் இருந்தபோது வெம்பக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.178/2022 வழக்கில் விஜயகரிசல்குளம் காளியம்மன் கோவில் தெருவில் கடந்த 25.05.2022ம் தேதி காலை 8 மணிக்கு பின் மாலை 6 மணிக்குள் இறந்த நபரின் வீட்டு மாடியில் வைத்து இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட காயத்ரி என்பவருக்கு திருமணமாகி 7 வருடங்கள் முடிவடையாத நிலையில் மேற்படி நபரின் மரணம் வரதட்சனை கொடுமையால் ஏற்பட்டுள்ளதா என விசாரணை செய்து அறிக்கை வழங்க கோரிய வெம்பக்கோட்டை காவல்நிலைய சார்பு ஆய்வாளரின் வேண்டுதல் கடிதத்தை வெம்பக்கோட்டை காவல்நிலைய பெண் காவலர் திருமதி. திவ்யா என்பவர் மூலம் பெற்று பின்னர் விருதுநகர் அரசு மருத்துவ

கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் வைத்து மேற்படி பெண் காவலரால் அடையாளம் காட்டப்பட்ட இறந்த நபர் காயத்ரி பிரேதத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அதன் உடல் உறுப்புகளையும், நாவடி எலும்பையும் சேகரித்து வைத்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கக்கோரி மருத்துவருக்கு வேண்டுகோல் கடிதம் தயார் செய்து மேற்படி கடித்ததையும், மேற்படி பிரேதத்தையும், மேற்படி பெண் காவலரிடம் ஒப்படைத்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சாத்தூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து வழக்கின் பிரிவு 174(3) சி.ஆர்.பி.சி ல் இருந்து பிரிவு 302 ஐ.பி.சி. ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை தெரிந்து கொண்டேன். பின்னர் வழக்கின் சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்கு 26.05.2022 ம் தேதி எனது அலுவலகத்தில் ஆஜராக சம்மன் சார்பு செய்து 26.05.2022 ம் தேதி எனது அலுவலகத்தில் ஆஜராகிய சாட்சிகள் வெள்ளைச்சாமி, அஜித்குமார், இராமசாமி, நிரைகுளத்தாள், மாரிச்சாமி, கஜேந்திரகுமார், முத்துக்கிருஷ்ணன், தங்கவேல், மகாலிங்கம் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எனது விசாரணையின்படி இறந்த காயத்ரியின் இறப்பு சம்பந்தமாக பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் இறந்த காயத்ரியின் கணவர் கொத்தாளமுத்து தான் காயத்ரியை கொலை செய்ததாக தெரியவருகிறது என்றும், அனுமானிப்பதாகவும், மேற்படி காயத்ரியின் இறப்பு குறித்து மேல்நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கை தயார் செய்து சாத்தூர் உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தனர். நான் விசாரணை அலுவலருக்கு அனுப்பிய அறிக்கை அ.சா.ஆ. 23 ஆகும். பிரேத விசாரணைக்காக அனுப்பப்பட வேண்டிய அறிக்கை அ.சா.ஆ. 24 ஆகும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எந்த தேதியில் என்னை பிரேத விசாரணை செய்யவேண்டுமென்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் 26.05.2022 ஆகும். நான் யார் மூலமாக சாட்சி சம்மன் அனுப்பினேன் என்றால் போலீசார் மூலமாக சாட்சி சம்மன் அனுப்பினேன். சாட்சிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் அனைத்து சட்ட விதிமுறைகளை பின்பற்றி பெறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடம் எந்த தேதியில் வாக்குமூலம் பெற்றேன் என்றால் 28.06.2022 ஆகும். எதிரி கடந்த 08.06.2022 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியிடம் வாக்குமூலம் வாங்குவதற்கு நீதிமன்றம் மூலம் அனுமதி ஏதும் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. எதிரியிடம் பெறப்பட்ட வாக்குமூலம் சட்டத்திற்கு முரணானது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.